பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

02 01 2025 7 15

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. நிலக்கரி உற்பத்தியில் இந்தியா சாதனை படைத்துள்ளதாக நிலக்கரி அமைச்சகம் தெரிவித்துள்ளது.
2. கத்தார் சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கர், அந்நாட்டு பிரதமரும், வெளியுறவுத்துறை அமைச்சரை சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சு நடத்தினார்.
3. நாட்டின் பசுமைக்குடில் வாயுக்களின் வெளியேற்றத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
4. நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் குறைந்தபட்ச வெப்பநிலை ஜனவரி மாதத்தில் இயல்பைக் காட்டிலும் கூடுதலாக இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் ஜஸ்பிரீத் பும்ரா முதலிடத்தை பெற்றுள்ளார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

கடந்த ஆண்டு நிலக்கரி உற்பத்தியில் இந்தியா சாதனை படைத்துள்ளதாக நிலக்கரி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் வரை நாட்டின் மொத்த நிலக்கரி உற்பத்தி 97 புள்ளி ஒன்பது நான்கு மில்லியன் டன் என்ற அளவில் அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இது இதற்கு முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் ஐந்து புள்ளி மூன்று மூன்று சதவீதம் கூடுதலாகும்.

நாட்டின் அதிகரித்து வரும் எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வதை கருத்தில் கொண்டு மத்திய அரசு தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக நிலக்கரி அமைச்சகம் கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

நாட்டில் உள்ள கிராமங்களில் வறுமை இல்லை என்ற நிலையை உருவாக்குவதற்கான அனைத்து திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று தமது அமைச்சகம் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகளை அவர் ஆய்வு செய்தார்.

மாதாந்திர அடிப்படையில் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு அதனை அடைவதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார்.

பிரதமரின் கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின் கீழ் 42 லட்சம் வீடுகளைக் கட்டுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அவற்றில் 32 லட்சம் வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், இதுவரை நான்கு லட்சத்திற்கும் கூடுதலான வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

2024-25-ஆம் நிதி ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கில், நிலுவையில் உள்ள பத்து லட்சம் வீடுகளை கட்டுவதற்கான அனுமதி நடப்பு ஆண்டில் வழங்கப்படும் என்று திரு சிவராஜ் சிங் சௌகான் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள் அளித்து வரும் சேவைகள் குறித்த பொதுமக்களின் குறைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று மத்திய நிதிச் சேவைகள் குறை செயலாளர் திரு எம் நாகராஜூ தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற நிதிச் சேவைகள் துறை ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், மக்கள் தங்களது குறைகள் குறித்து அளித்துள்ள புகாரின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் அதிகாரிகள் ஆய்வு செய்து உடனடி தீர்வு காணு மாறு அறிவுறுத்தினார்.

வாடிக்கையாளர்களுக்கு திருப்தி அளிக்கும் வகையில் குறைதீர்ப்பு நடவடிக்கைகள் இருக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

சட்ட நெறிமுறைகளுக்கு உட்பட்டு குறைதீர்ப்பு நடவடிக்கைகள் இருப்பதை சம்பந்தப்பட்ட. நிறுவனங்களின் உயரதிகாரிகள் உறுதி செய்ய வேண்டுமென்று அவர் வலியுறுத்தினார்.

புகார்கள் மீண்டும் மீண்டும் வருவதை தடுக்க தொழில்நுட்ப அடிப்படையிலான தீர்வுகள் கண்டறியப்பட வேண்டுமென்றும், இத்தகைய நடவடிக்கைகள் நேரத்தை மிச்சப்படுத்துவதன் மூலம் தீர்வு நடைமுறைகளின் செயல் திறனையும் அதிகரிக்கும் என்று திரு நாகராஜு தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

நாட்டின் பசுமைக்குடில் வாயுக்களின் வெளியேற்றத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த வாயுக்களின் வெளியேற்றத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகள் காரணமாக கடந்த 2020-ஆம் ஆண்டில் ஏழு புள்ளி ஒன்பது மூன்று சதவீதம் குறைந்துள்ளது என்றும் மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ நா பருவநிலை மாற்றம் தொடர்பான ஒப்பந்தத்தின்படி வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் கார்பன் வெளியேற்றத்தை 45 சதவீதமாக குறைக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் புதைப்படிவமற்ற எரிசக்தி உற்பத்தியை 50 சதவீதமாக அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஈரான் நாட்டின் துணை வெளியுறவுத்துறை அமைச்சர் திரு மஜித் **Takht ravanchi** இரண்டு நாள் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

அவரது இந்த பயணத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையேயான அரசியல் சூழல் குறித்த ஆலோசனைக் கூட்டங்களில் பங்கேற்கிறார்.

பின்னர் இரு நாடுகளுக்கும் இடையேயான கலாச்சாரம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புகள் குறித்தும் அவர் பேச்சு நடத்துகிறார்.

2022-23-ஆம் நிதி ஆண்டில் இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம் 17 புள்ளி ஐந்து பில்லியன் டாலர் அளவை எட்டியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

அரசு முறைப் பயணமாக கத்தார் சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ் ஜெய்சங்கர், அந்நாட்டு பிரதமரும், வெளியுறவுத்துறை அமைச்சருமான திரு ஷேக் முகமது பின் அப்துல் ரஹ்மான் பின் ஜாசின் அல்தானிக்-யை சந்தித்து பேசினார்.

இந்த பேச்சுவார்த்தையின் போது இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் பிராந்திய சர்வதேச விவகாரங்கள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

அரசியல், வர்த்தகம், முதலீடு, எரிசக்தி, பாதுகாப்பு, கலாச்சாரம் மற்றும் மக்கள் தொடர்பு போன்ற துறைகளில் ஒத்துழைப்பு மேம்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

[]<<<>>>[]

மத்திய பிரதேச மாநிலம் போபாவில் விஷவாயு கசிவு சம்பவம் நேரிட்ட 40 ஆண்டுகளுக்குப் பிறகு அங்குள்ள யுனியன் கார்பைட் நிறுவனத்திலிருந்து 377 டன் கழிவுகளை அகற்றும் பணி தொடங்கியுள்ளது.

மனிதர்களின் உடல் நிலையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய இந்த கழிவுகள் 13 கண்டெய்னர்களில் ஏற்றி சீலிடப்பட்டு தர் மாவட்டத்தில் உள்ள பீதாம்பூர் தொழில்பேட்டை அமைந்துள்ள பகுதிக்கு கொண்டு செல்லப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களை கொண்டு செல்வதற்கான பசுமை வழித்தடம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக போபால் விஷவாயு சோக சம்பத்தின் நிவாரண மற்றும் மறுவாழ்வுத்துறையின் இயக்குநர் திரு ஸ்வதந்திரகுமார் சிங் தெரிவித்துள்ளார்.

1984-ஆம் ஆண்டு நேரிட்ட விஷவாயு கசிவு சம்பவத்தில் ஐயாயிரத்து 479 பேர் உயிரிழந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

[]<<<>>>[]

இந்திய விமானப்படையின் மேற்கு படைப்பிரிவு தளபதியாக ஏர் மார்ஷல் ஜிதேந்திர மிஸ்ரா நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்திய விமானப்படையின் போர் விமானியாக 1986-ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த அவர், 38 ஆண்டு காலம் விமானப்படையின் பல்வேறு பிரிவுகளில் பணியாற்றியுள்ளார்.

இந்திய விமானப்படையின் மேற்கு படைப்பிரிவு தளபதியாக பணியாற்றிய ஏர்மார்ஷல் பங்கஜ் மோகன் சின்ஹா ஓய்வுபெற்றதை அடுத்து, புதிய தளபதியாக ஏர்மார்ஷல் ஜிதேந்திர மிஸ்ரா நியமிக்கப்பட்டுள்ளார்.

[]<<<>>>[]

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் குறைந்தபட்ச வெப்பநிலை ஜனவரி மாதத்தில் இயல்பைக் காட்டிலும் கூடுதலாக இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையத்தின் தலைமை இயக்குநர் திரு மிருத்யூஞ்சய் மொகோபாத்ரா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாட்டின் கிழக்கு, வடமேற்கு மற்றும் மத்திய மேற்குப் பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் கடும் குளிர் நிலவும் என்று கூறினார்.

ஜனவரி மாதம் முதல் மார்ச் வரையிலான காலத்தில் மழைப்பொழிவு இயல்பைவிட குறைவாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

இதனிடையே பீகாரில் நிலவி வரும் கடும் குளிர் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு சம்ப்ரான் மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலை ஏழு டிகிரி செல்ஸியசாக பதிவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அம்மாநிலத்தில் வரும் நாட்களில் குளிரின் தாக்கம் அதிகரிக்கும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

கஷ்மீரில் ஓரிரு இடங்களில் நிலவி வரும் கடும் பனிப்பொழிவு இன்றும் தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.,

வரும் நான்காம் தேதி முதல் ஆறாம் தேதி வரை பெரும்பாலான இடங்களில் கூடுதல் பனிப்பொழிவு இருக்கும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

[]<<<>>>[]

தெலங்கானா மாநிலம் மெட்சல் - சமீர்பேட் இடையே மெட்ரோ ரயில் திட்டத்தை விரிவுபடுத்த அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கான விரிவான செயல்திட்ட அறிக்கையை தயாரிக்குமாறு அம்மாநில முதலமைச்சர் திரு ரேவந்த்ரெட்டி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

**[]<<<>>>[]**

சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் ஜஸ்பிரீத் பும்ரா பந்து வீச்சு பிரிவில் முதலிடத்தை பெற்றுள்ளார்.

ஐ சி சி வெளியிட்டுள்ள தர வரிசைப்பட்டியலில் தொள்ளாயிரத்து ஏழு புள்ளிகளுடன் பும்ரா முதலிடத்திலும், ஆஸ்திரேலிய வீரர் ஹசல்வுட் 843 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், ஆஸ்திரேலியாவின் கம்மின்ஸ் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

**[]<<<>>>[]**

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் பெங்கால் அணி - குணசிகா அணியை வென்றது.

ரூர்கேலாவில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் பெங்கல் அணி இரண்டு – ஒன்று என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.,

இன்று நடைபெறும் ஆட்டத்தில் சூர்மா கிளப் அணி –உத்திரபிரதேச அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இன்று இரவு மணி 8-15-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

சர்வதேச செஸ் தரவரிசைப் பட்டியிலில் இந்தியாவின் அர்ஜூன் எரிகேசி நான்காவது இடத்திலும், குகேஷ் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

முன்னணி ஆட்டக்காரரான நார்வேயின் மேக்னஸ் கார்ல்சன் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

**[]<<<>>>[]**

இந்தூரில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு ஆட்டங்களில் இந்தியாவின் யுவன்நந்தால், தட்ஷினேஸ்வர் சுரேஷ், தேவ்ஜாவியா, ஷிராக் துஹான், ஆர் என் ஷா, சித்தார்த் ராவத், விஷ்ணுவர்தன் ஆகியோர் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் மோகன்பெஹான் அணி – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

***End of News***